6

# வெற்றிப்பயணம்

வழிநடக்க வருகவே ! வளமைகொள்ள வருகவே!
பொழுதுபுலரும் வேளையாச்சு : போகவேணும் வருகவே!

கருமுகில்கள் கலைந்து போகக் காற்றெழுந்து வீசுது :
கண்மயக்கும் இருள் விலக்க விண்ணில்வெண்மை காணுது :
தருணம்நல்ல தருணம்நல்ல பருவம்நல்ல பருவமாம்-
சமுத்திரங்கள் திரண்டெழுந்த தன்மைபோல வருகவே!

ஏர்பிடித்து நிலங்கிழித்து பாரதத்தைக் காப்பவர்
எழில்மணிக் கரங்கள்கொட்டி ஏறுபோல வருகவே!
பேர்படைத்த தமிழர் தாங்கள் முன்னெடுத்த பாதங்கள்
பின்னெடுத்து வைத்திடாத பெருமைபாடி வருகவே!

நாற்றுநட்டு நடவுசெய்து நாடுகாக்கும் நங்கைமீர்,
சேற்றினில் பதிந்தபாதம் திகழஇங்கு வருகவே!
ஆற்றினைத் தடுத்தணைகள் ஆக்குகின்ற தோழர்காள்,
அரும்புமேனி வேர்வைமின்ன அணிவகுத்து வருகவே!

அழுதரற்றும் ஏழைகண்ணில் வழிந்திடும் கண்ணீரிலே
அனற்பிழம்பொன் றேபிறந்திவ் வகிலமெங்கும் தாவுது!
தொழுதுகெஞ்சும் அடிமைவாழ்வின் துயரதுன்பம் யாவுமே!
தொலைந்தொழிந்து போகுது! குலைந்துசாம்பல் ஆகுது!

உச்சிமீது வானும்மீனும் ஒடிந்துவீழ்ந்த போதிலும்-
அச்சமின்றித் தடைகள் யாவும் துச்சமென்று கிளம்புவோம்!
இச்சகத்தின் எழிலைஒயிலை எமதுகைகள் படைத்தன-
எமது சொந்தம் நமது சொந்தம் என்றுபாடி முழங்கினோம்!

தொட்டதொட்ட இடங்களெங்கும் சுவர்க்கம்செய்யும் சிற்பிநாம்
சுரண்டலென்னும் பகைதொலைக்கத் தோள்குலுக்கி, உலகெனும்
பெட்டகத்தி லுள்ளசெல்வம் யாவும்நமது பேரிலே
பட்டயங்கள் செய்துபற்ற எட்டிவைக்கும் பயணமாம் !

புதிய உலகம் ஒன்றுதோன்றிப் பூவுங்கனியும் குலுங்கிடும் !
பூமிபச்சை மரகதம்போல் போர்வைபோர்த்து விளங்கிடும் !
விதியைமிதித்து ஏழைதனது வெற்றிக்கொடியை நாட்டுவான்-
விரிந்தமார்பில் இன்பமென்ற வெறிமிகுந்து வாழுவான்!



இலவச விநியோகத்திற்காக

முயற்சிசெய்து மேலும்மேலும் முன்நடக்க ஆட்சியும்
முந்திவந்து கைகொடுக்கும் மோடிவித்தை செய்குவோம்
வயிறும் பணமும் அடிமைசெய்ய மனிதனங்கு வாழலாம்.
வயிற்றுக்கடிமை யானமனிதன் மறைந்துபோகப் போகிறான் !

சாதிசமயப் பூசலின்றித் தயைநிறைந்த இனிமையில்
சரித்திரத்தைப் புதுமைசெய்து சாந்திகொண்டு வாழுவோம் ;
நீதியார்க்கும் ஒன்றுபோல நின்றுசேவை செய்திடும்.
நினைந்துபார்க்க நமது நெஞ்சில் இன்பவெள்ளம் பெருகிடும் !

நாய்க்குமிங்கு சோற்றுப்பஞ்சம் இல்லையிந்த நாட்டிலே
நமக்குமட்டும் ஏன்எனுமோர் ஞாயங்கேட்க நாதியார் ?
வாய்க்குவந்த வாறுபேசி வம்பளக்கும் வீணர்கள்
வலிமைகுன்றி வாயடைக்கத் தலைநிமிர்ந்து வருகுவீர் !

அங்கம்நோக உழைக்கும்மக்கள் ஆவிசோர்ந்து களைப்பதும்,
தங்கம்தோண்டி எடுக்கும்கைகள் தரித்திரத்தில் இளைப்பதும்,
பொங்கியோங்கும் நமதுநெஞ்சப் புதியசோதித் தீயதன்
கங்குபட்டுச் சாம்பலாகக் கண்சிவந்து கிளம்புவோம் !

இங்குஇன்று அந்தவுலகம் எழுந்திடக்கல் நாட்டுவோம் !
இன்னல்யாவும் தீரவேண்டி இதயசோதி மூட்டுவோம் !
சிங்கம்போலத் தலைநிமிர்ந்து திரண்டெழுந்து வருகுவீர்
திருஉலாவும் நமதுதோளில் ஜெயமுலாவ வருகுவீர் !

- கே. சி. எஸ். அருணாசலம் -
'சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியக் கவிதை'



இலவச விநியோகத்திற்காக